**ரூ. 40 ஆயிரம் கோடி பயிர்க் கடன்: நபார்டு வங்கி அறிவிப்பு**

First Published : 09 Jul 2010 12:24:13 AM IST

புது தில்லி, ஜூலை 8: நடப்பு நிதியாண்டில் ரூ. 40 ஆயிரம் கோடி பயிர்க் கடன் வழங்கவுள்ளதாக தேசிய வேளாண்மை மற்றும் கிராம வளர்ச்சி வங்கி (நபார்டு) அறிவித்துள்ளது.

இது கடந்த ஆண்டு வழங்கப்பட்ட கடன் தொகையை விட 11 சதவீதம் அதிகமாகும்.

இது குறித்து வங்கியின் தலைவர் யூ.சி. சாரங்கி தில்லியில் வியாழக்கிழமை நடைபெற்ற இந்திய தொழிலகக் கூட்டமைப்பு (சிஐஐ) கூட்டத்தில் கூறியது:

2010-11 ம் நிதியாண்டில் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ள கடன் தொகைக்காக வங்கி ரூ. 8 ஆயிரம் கோடி வரை கடன் வாங்க வேண்டியுள்ளது. நடப்பு நிதியாண்டில் மறுபயிர் கடனாக ரூ. 40 ஆயிரம் கோடி வழங்க முடிவு செய்துள்ளோம். இவற்றில் ரூ.13 ஆயிரம் கோடி நீண்ட காலக் கடனாகவும், 26 ஆயிரம் கோடி குறுகியக் கால கடனாகவும் வழங்கப்படும்.

கடந்த ஆண்டில் இது ரூ.36 ஆயிரம் கோடியாக இருந்தது. இந்த நிதியாண்டில் ரூ. 8 ஆயிரம் கோடி வரை கடன் வாங்க வங்கி முடிவு செய்துள்ளது. கடன் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் இந்தத் தொகை திரட்டப்படும்.

வங்கியில் கடனுக்காக விண்ணப்பிக்கும் விவசாயிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. விவசாயத்துக்கு தொடக்கத்தில் அதிக முதலீடு தேவைப்படுகிறது. விவசாயிகளின் தேவைகளை முடிந்த அளவுக்கு நபார்டு வங்கி நிறைவு செய்து வருகிறது. கடந்த ஆண்டில் சுமார் 25 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் நபார்டு வங்கியில் கடன்பெற்று பயனடைந்துள்ளனர்.

விவசாயம் தவிர கிராமப்புறங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக ரூ.18 ஆயிரம் கோடியை பல்வேறு மாநிலங்களுக்கு நபார்டு வங்கி கடனாக அளித்துள்ளது என்றார் அவர்.

**சின்ன வெங்காயத்தில் அழுகல் நோயை கட்டுப்படுத்த வேளாண் நிபுணர் யோசனை**

First Published : 08 Jul 2010 11:32:56 AM IST

பெரம்பலூர், ஜூலை 7: சின்ன வெங்காயத்தில் ஏற்படும் அழுகல் நோயை கட்டுப்படுத்துவது குறித்து பெரம்பலூர் அருகேயுள்ள வாலிகண்டபுரம் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய தோட்டக்கலை தொழில்நுட்ப நிபுணர் ஜே. கதிரவன் யோசனை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில், தற்போது பயிரிடப்பட்டுள்ள சிறிய வெங்காயப் பயிரில் அழுகல் நோயின் தாக்குதல் பரவலாகத் தெரிகிறது. இந்த அழுகல் நோயானது, ப்யூசேரியம்

ஆக்சிஸ்போரம் எனும் பூஞ்சை மூலமாக ஏற்படுகிறது. நோய்த் தாக்கிய விதைக் காய்களை நேர்த்தி செய்யாமல் நடுவதால், இந்த நோய் அதிகளவு ஏற்படும். நிலத்தில் ஈரப்பதம் அதிகமாக இருந்தால் இந்த பூஞ்சையின் தாக்குதல் அதிகமாக இருக்கும். எனவே, வெங்காய வயலுக்கு குறிப்பிட்ட இடைவெளியில் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

அதாவது நிலம் நன்கு காய்ந்த பிறகு நீர்ப்பாய்ச்ச வேண்டும். ஈரத்தன்மை இருக்கும் போது, நீர்ப்பாய்ச்சுவதை தவிர்க்க வேண்டும். களிமண் பாங்கான நிலங்களுக்கு 7 முதல் 9 நாள்களுக்கு ஒரு முறையும், மணற் பாங்கான நிலங்களுக்கு 5 நாள்களுக்கு ஒரு முறையும் நீர்ப்பாய்ச்சினால் போதுமானது. அழுகல் நோய்த் தாக்கிய வெங்காயத் தாள்கள் மஞ்சள் நிறமாக மாறி இருக்கும். மேலும், அழுகல் நோய் முற்றிய நிலையில் தாள்கள் நேராக இல்லாமல், துவண்டு போய் காணப்படும்.

செடியைப் பிடுங்கிப் பார்த்தால், காயின் அடிப்பாகம் அதாவது, வேர் தோன்றும் பாகம் அழுகி நைந்து போனது போல தோன்றும். இந்த நோய் தோன்றிய செடிகளை உடனடியாக பிடுங்கி அழித்துவிட வேண்டும். இல்லையெனில், இதன் வேர்ப் பகுதியில் உள்ள பூஞ்சை, நீர்ப்பாய்ச்சும் போது பரவி மற்ற செடிகளுக்கும் பாதிப்பை உண்டாக்கும்.

அழுகல் நோயைக் கட்டுப்படுத்தும் முறைகள்:
10 லிட்டர் நீருக்கு கார்பென்டாசிம் பூஞ்சாணக் கொல்லி 10 கிராம் மற்றும் ஸ்டிரெப்டோமைசீன் சல்பேட் 2 கிராம், ஒட்டும் திரவம் 5 மில்லி என்ற வீதத்தில் கலந்து காலை அல்லது மாலை வேளைகளில் வயலில் தெளிக்கலாம். இவ்வாறு செய்வதன் மூலம் வெங்காயத்தில் ஏற்படும் அழுகல் நோயைக் கட்டுப்படுத்தலாம் என்றார் அவர்.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் நெல் விதை விநியோகம்**

First Published : 08 Jul 2010 12:23:46 PM IST

திருவாடானை, ஜூலை 7: திருவாடானை தாலுகா ஆர்.எஸ்.மங்கலம் பகுதி விவசாயிகளுக்கு மானிய விலையில் நெல் விதைகள் விநியோகம் செய்யப்படுவதாக, வேளாண் அதிகாரி தெரிவித்தார்.

திருவாடானை தாலுகா ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் சுமார் 25 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் விவசாயம் செய்யப்படுகிறது.

இந்த ஆண்டு சம்பா பருவத்தில் வட்டாரத்தில் சுமார் 17 ஆயிரத்து 200 ஹெக்டேர் நிலப்பரப்பளவில் நெல் சாகுபடி செய்திட, வேளாண் துறையில் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தற்போது, ஆர்.எஸ்.மங்கலம் ஆனந்தூர் வேளாண்மை விரிவாக்க மையங்களில் சான்று பெற்ற நெல் விதைகளான பிபிடி 5204 மற்றும் ஜேஜில் 1796 ஆகிய ரகங்கள் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் ஒரு கிலோ விதை நெல்லுக்கு ரூ. 5 மானியம் வழங்கப்படுகிறது.

எனவே, இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி, மானிய விலையில் விவசாயிகள் நெல் விதை வாங்கி பயன்பெறுமாறு, ஆர்.எஸ்.மங்கலம் வேளாண் உதவி இயக்குநர் முகம்மது அப்துல் நசீர் தெரிவித்தார்.

**ரூ.5.25 லட்சத்துக்கு கருப்பட்டி விற்பனை**

First Published : 08 Jul 2010 11:14:53 AM IST

கோபி,ஜூலை 7: குன்னத்தூர் கூட்டுறவு விற்பனை சம்மேளனத்தில் ரூ.5.25 லட்சத்துக்கு கருப்பட்டி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

÷ஈரோடு மாவட்டம், நம்பியூர் அருகே உள்ள குன்னத்தூரில் கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்ட கூட்டுறவு கருப்பட்டி விற்பனை சம்மேளனம் செயல்பட்டு வருகிறது. இந்த கூட்டுறவு விற்பனை சம்மேளனத்தில் வாரந்தோறும் திங்கள்கிழமை கருப்பட்டி ஏலம் நடைபெறும்.

÷இந்த வாரம் 12 ஆயிரம் கிலோ தென்னங் கருப்பட்டி விற்பனைக்கு கொண்டுவரப்பட்டன. 10 கிலோ கொண்ட ஒரு சிப்பம் ரூ.395 க்கு விற்பனை செய்யப்பட்டது. இது கிலோ ஒன்றுக்கு ரூ.39.50 ஆகும். தென்னை கருப்பட்டி மொத்தம் ரூ.4 லட்சத்து 74 ஆயிரத்துக்கு விற்பனை ஆனது. கடந்த வாரத்தை விட இந்த வாரம் தென்னங் கருப்பட்டி விலை குறைந்துள்ளது.

÷இதே போல், ஒர் ஆயிரம் கிலோ பனங் கருப்பட்டி விற்பனைக்கு வந்தன. 10 கிலோ கொண்ட ஒரு சிப்பம் ரூ.560 க்கு விற்பனை செய்யப்பட்டது. கிலோ ஒன்றுக்கு ரூ.56 ஆகும். பனங் கருப்பட்டி மொத்தம் ரூ.56 ஆயிரத்துக்கு விற்பனையானது. தென்னை மற்றும் பனங்கருப்பட்டிகள் மொத்தம் ரூ.5 லட்சத்து 30 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது.

÷தற்போது பதனீர் உற்பத்தி குறைந்ததால் கூட்டுறவு விற்பனை சம்மேளனத்துக்கு பனங் கருப்பட்டிகள் வரத்து மிகவும் குறைந்தது. கடந்த வாரம் 2 ஆயிரம் கிலோ பனங்கருப்பட்டி விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. கடந்த வாரத்தை விட இந்த வாரம் தென்னங்கருப்பட்டி கிலோ ஒன்றுக்கு ரூ4.50 காசு குறைந்தது.

÷குன்னத்தூர் கூட்டுறவு விற்பனை சம்மேளனத்துக்கு நம்பியூர், சிறுவலூர், கொளப்பலூர், வெள்ளாங்கோவில், குருமந்தூர், அயலூர், பதிப்பாளையம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் கருப்பட்டியை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

÷இத் தகவலை கூட்டுறவு விற்பனை சம்மேளனத்தின் தனி அதிகாரி கருணாமூர்த்தி தெரிவித்தார்.

**பயறுவகை பயிர்கள்: அதிக மகசூலுக்கு வழிமுறைகள்**

First Published : 08 Jul 2010 11:15:37 AM IST

ராசிபுரம்,ஜூலை 7: எலச்சிப்பாளையம் வட்டாரத்தில் பயறுவகை பயிர்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் அதிக மகசூல் எடுக்க 2 சதம் டிஏபி கரைசலை இலை வழியாக உரமிட்டு பயன்பெறலாம் என எலச்சிப்பாளையம் வட்டார வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் கேண்டுக்கொண்டுள்ளார். அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: பயறுவகைப் பயிர்களில் தரமான விதைகள் பெறவும், மகசூல் பெறவும் போதிய ஊட்டச்சத்து அவசியம். விதைகள் உருவாகி

வளரும்போது அவற்றுக்கு, ஊட்டச்சத்துக்கள் தேவைப்படுகிறது.

இதற்கு இலை மூலமாக டிஏபி கரைசல் தெளிக்கும்போது விதைகளுக்கு எளிதில் ஊட்டச்சத்து கிடைக்கும். இது அதிக காய்கள் பிடிக்கவும் மணிகள் திரட்சியாக வருவதற்கும் பயன்படுகிறது.

இக் கரைசலை வயலில் போதிய ஈரம் இருக்கும்போது பூக்கும் தருணத்தில் ஒரு முறையும் 15 நாட்கள் கழித்து வயலில் போதிய ஈரம் இருக்கும்போது மறுமுறையும் தெளிக்க வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு ஒருமுறை தெளிக்க 5 கிலோ டிஏபி, மற்றும் 250 லிட்டர் நீர் தேவைப்படுகிறது.

முதலில் 5 கிலோ டிஏபி உரத்தை ஒரு பிளாஷ்டிக் வாளியில் 10 லிட்டர் நீரில் ஊறவைக்க வேண்டும். மறுநாள் வாளியில் தெளிந்திருக்கும் நீரை வடிகட்டி எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்தக் கரைசல் நீ6ர் சேர்த்து 250 லிட்டர் கரைசல் தயாரித்துக் கொள்ள வேண்டும். பின்பு வயலில் போதிய ஈரம் இருக்கும்போது கைத்தெளிப்பான் மூலமாக மாலையில் தெளிக்க வேண்டும்.

**40 ஏக்கரில் இயற்கை விவசாயம்: மா, பலா உள்ளிட்ட பழ மரங்கள் சாகுபடி**

First Published : 08 Jul 2010 12:21:22 PM IST

சிவகங்கை, ஜூலை 7: சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் அருகே 40 ஏக்கரில் இயற்கை விவசாயம் நடைபெற்று வருகிறது. இதில், மா,பலா உள்ளிட்ட மரங்கள் செழித்து வளர்கின்றன.

காளையார்கோவில் ஊராட்சியில் கல்லுவழி கிராமத்தில் ஆபிரகாம் என்பவருக்குச் சொந்தமான தோட்டம் உள்ளது. விவசாயிகள் சங்கத் தலைவரான இவர், அப்பகுதியில் தரிசாகக் கிடந்த நிலத்தை சீர் செய்து, தற்போது பசுமை கொழிக்கும் இடமாக மாற்றியுள்ளார்.

மரங்கள் அனைத்துக்கும் இவர் இயற்கை உரங்களையே பயன்படுத்துகிறார் என்பது இதில் சிறப்பம்சமாகும். மேலும், சிக்கன முறையில் தண்ணீர் பாய்ச்சும் சொட்டு நீர்ப்பாசன முறையைக் கையாள்கிறார். இதற்காக, 65 அடி விட்டம், 7 அடி ஆழம் கொண்ட இரண்டு தண்ணீர்த்

தொட்டிகள் உருவாக்கி, அதிலிருந்து ஸ்பிரிங்லர் முறையில் மரங்களுக்கு நீர்ப் பாய்ச்சி வருகிறாராம்.

ஒரு ஏக்கரில் 200 பலாக் கன்றுகள் நடவேண்டும். உரமாக எரு சாணத்தை பயன்படுத்தவேண்டும். அப்போதுதான் மரம் சிறப்பாக வளரும் என, சக விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்குகிறார்.

பழ மரங்கள் மட்டுமின்றி, மலைப் பிரதேசங்களில் வளர்க்கக் கூடிய மிளகு, பட்டை போன்ற நறுமணப் பொருள்களும் இந்தத் தோட்டத்தில் வளர்க்கப்பட்டு வருகின்றன.

இயற்கையைப் பயன்படுத்தி இயற்கையைப் பாதுகாக்கலாம் என்கிறார் விவசாயி ஆபிரகாம்.

சிவகங்கை மாவட்டம் அசிசி நகர், பனையூர், மேலமங்கலம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த உழவர் மன்ற விவசாயிகள் 42 பேர் சமீபத்தில், இந்த இயற்கை விவசாயத்தை பார்வையிட்டுள்ளனர்.

இவர்களிடம் விவசாயி ஆபிரகாம், நிலத்தில் தொடர்ந்து நெல் பயிரிடுவதை தவிர்த்து, பழ மரங்கள் சாகுபடி செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

**மாதுளம் பழம்விலை சரிவு**

கோயம்பேடு : கோயம்பேடு மார்க்கெட்டிற்கு மாதுளம் பழம் வரத்து அதிகம் இருப்பதால், விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது.சென்னை கோயம்பேடு மார்க்கெட்டிற்கு, ஆண்டு முழுவதும் மாதுளம் பழம் வரத்து இருக்கிறது. நான்கு மாதம் ஆந்திராவில் இருந்தும், அடுத்த நான்கு மாதம் மகாராஷ்டிராவில் இருந்தும், அடுத்த நான்கு மாதம் கர்நாடகாவில் இருந்தும் வரத்து இருக்கும்.தற்போது ஆந்திரா சீசன் முடிந்து மகாராஷ்டிராவில் இருந்து மாதுளை வரத்து அதிகம் இருக்கிறது. தினமும் 10 லோடு மாதுளை வரத்து இருக்கிறது. கடந்த சில நாட்களாக மாதுளை வரத்து அதிகமாக இருக்கிறது.அதனால், விலை சரிவு ஏற்பட்டுள்ளது. ஒரு கிலோ மாதுளை 20 ரூபாயிலிருந்து 100 ரூபாய் வரை, தரத்திற்கு ஏற்றவாறு விற்கப்படுகிறது. வெளிமாநிலத்தில் இருந்து, அட்டைப் பெட்டியில் "பேக்கிங்' செய்து கொண்டு வரப்படுகிறது.தற்போது 27 பழங்களுடைய, பெரிய அட்டைப்பெட்டி 600 ரூபாயும், 18 பழங்களுடைய சிறிய அட்டைப் பெட்டி 350 ரூபாய்க்கும்விற்பனை செய்யப்படுகிறது.இது குறித்து மாதுளை வியாபாரிகள் பக்ருதீன், பாபு கூறியதாவது:மருத்துவ குணமுடைய மாதுளம் பழம் ஆண்டு முழுவதும் வரத்து இருக்கிறது. வரத்து அதிகம் இருப்பதால் விலை குறைந்துள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**நெற்பயிர் கருகலை தடுக்க நடவடிக்கை : விவசாயிகளுக்கு வேளாண் அலுவலர் அறிவுரை**

காஞ்சிபுரம் : வாலாஜாபாத் வட்டாரத்தில் நெற்பயிர்கள் கருகுவதை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகளுக்கு, வேளாண்மை உதவி அலுவலர் பழனிவேலு அறிவுரை வழங்கியுள்ளார்.அவரது அறிக்கை விவரம்:வாலாஜாபாத் வட்டாரம் தென்னேரி மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில் தற்போது நிலவி வரும் வானிலை மாற்றத்தால் பகலில் கடுமையான வெயில், இரவில் மேகமூட்டத்துடன் கூடிய ஈரப்பதம் அதிகமாக உள்ளது.இதனால், நெற்பயிரில் பாக்டீரியல் இலைக்கருகல் நோய் தாக்குதல் துவங்கியுள்ளது. இந்நோய் தாக்கிய நெற்பயிரில் இலையின் நுனியிலிருந்து இலை கருக ஆரம்பித்து, பார்ப்பதற்கு தீய்ந்ததுபோல் காணப்படும்.இதை தடுக்க விவசாயிகள், உழவியல் முறையில் தேவையான தழைச்சத்தை இட வேண்டும்.வரப்போரங்களில் உள்ள களைகளான புல், பூண்டுகளை நீக்க வேண்டும்.ரசாயன மருந்தாக ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட், டெட்ராசைக்கிளின் கலப்பு மருந்து 120 கிராம், காப்பர் ஆக்சிகுளோரைடு 500 கிராம் என்ற அளவில் ஏக்கருக்கு தெளித்து கட்டுப்படுத்தலாம்.இரண்டாம் முறையாக ஒரு வார இடைவெளியில் தெளிக்கவும். நோயின் ஆரம்ப நிலையாக இருந்தால் வேப்ப எண்ணெய் 3 சதம் அல்லது வேப்பங்கொட்டை சாறு 5 சதம் ஆகியவற்றுடன் ஒட்டும் திரவம் 200 மில்லி அல்லது 200 கிராம் காதி சோப் பயன்படுத்தி தெளிக்கலாம். இதன் மூலம் நோயை கட்டுப்படுத்தலாம்.இவ்வாறு பழனிவேலு தெரிவித்துள்ளார்.

**பருவமழையால் ஆடுகள் கொழு கொழுவிலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி**

மேட்டூர்: மேட்டூர் பகுதியில் பரவலாக பெய்த பருவமழை காரணமாக பசும்தீவனம் கிடைத்ததால், ஆடுகள் கொழு கொழுவென வளர்ந்து, விலையும் அதிகரித்துள்ளது விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. மேட்டூர் தாலுகா, மேச்சேரியில் வாரம்தோறும் புதன்கிழமை ஆட்டு சந்தை கூடும். சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இருந்து நேற்று 4,000த்துக்கும் மேற்பட்ட செம்மறி மற்றும் வெள்ளாடுகள் விற்பனைக்கு வந்தது.வழக்கத்தை விட இந்த வாரம் சந்தைக்கு விற்பனைக்கு வந்த ஆடுகள் கொழு, கொழுவென இருந்ததால் ஈரோடு, கரூர், திருப்பூர் உள்பட பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்த வியாபாரிகள் கூடுதல் விலைக்கு ஆடுகளை வாங்கி சென்றனர்.இதுகுறித்து ஆடு வளர்க்கும் விவசாயிகள் கூறியதாவது:மூன்று மாதங்களுக்கு முன் வறட்சி காரணமாக ஆடுகளுக்கு போதுமான தீவனம் கிடைக்கவில்லை.

தீவன பற்றாக்குறையால் ஆடுகளின் எடையும் குறைந்தது. அந்த சமயத்தில் விவசாயிகள் ஆடுகளை வளர்க்க முடியால் விற்பனை செய்ய முன் வந்தனர்.அதனால், ஆடுகள் விலை வீழ்ச்சியடைந்தது. ஒரு மாதமாக சேலம் மாவட்டத்தில் பரவலாக பருவமழை பெய்ததால் ஆடுகளுக்கு போதுமான பசும்தீவனம் கிடைத்தது. ஆடுகளும் கொழுகொழுவென வளர்ந்ததால் மூன்று மாதத்திற்கு முன் 5,000 ரூபாய்க்கு விற்ற செம்மாறியாட்டு கிடா தற்போது 5,500 முதல் 6,000 ரூபாய்க்கு விற்கிறது.மூன்று மாதங்களில் ஆடுகளின் விலை சராசரியாக 500 ரூபாய்

அதிகரித்துள்ளது. ஆடுகளும் கொழு கொழுவென இருப்பதாலும், பசும் தீவனம் கிடைப்பதாலும் வியாபாரிகள் மட்டுமின்றி விவசாயிகளும் மகிழ்ச்சியோடு ஆடுகளை வாங்கி செல்கின்றனர், என்றார்.

**வேளாண் அதிகாரிகளுக்கு பயிர் புத்தூட்ட பயிற்சி**

பொள்ளாச்சி: வேளாண்மை துறை அதிகாரிகளுக்கு பயிர் புத்தூட்ட பயிற்சி முகாம் நடந்தது. கோவை மாவட்ட வேளாண் புள்ளியியல் துறை சார்பில் தேசிய வேளாண்மை காப்பீடு திட்டம் மற்றும் பயிர் மதிப்பீட்டு ஆய்வின் கீழ் பயிர் புத்தூட்ட பயிற்சி முகாம் நடக்கிறது. முகாமில், வேளாண்மை துறை, தோட்டக்கலை துறை உட்பட மூன்று துறைகளை சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்றனர். இதில், கோவை மாவட்ட வேளாண் துறை துணை இயக்குனர் சங்கரராஜ், வேளாண் புள்ளியியல் உதவி இயக்குனர் மகுடீஸ்வரமூர்த்தி, கோட்ட புள்ளியியல் துறை ஆய்வாளர் கோவிந்தராஜ் ஆகியோர் பங்கேற்றனர். கூட்டத்தில், அதிகாரிகள் பேசியதாவது: கிராமப்புறங்களில், பயிரிடப்படும் பயிர்களின் மகசூல் குறித்து ஆய்வு செய்யும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் பருவம் துவங்குவதற்கு முன் புள்ளியியல் கணக்கு பெறப்படும்.

அந்தவகையில், இந்தாண்டும் பயிர் மதிப்பீடு செய்து கணக்கிடப்படவுள்ளது. மத்திய அரசு சார்பில் "ராண்டம்' எண் வழங்கப்படும். இதன்கீழ் கிராமப்புறங்களில் பயிர்களை தேர்வு செய்து, அவற்றை ஆய்வு செய்ய வேண்டும். அதனடிப்படையில், பயிர்கள் மதிப்பீடு செய்யப்படும். இதன்மூலம்தான், நாட்டின் உணவு உற்பத்தியை கணக்கிட முடியும். எனவே, அதிகாரிகள் தரும் மகசூல் குறித்த விபரங்கள் தெளிவுடன் இருக்க வேண்டும். இவ்வாறு, அதிகாரிகள் பேசினார். தொடர்ந்து, இன்று பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட வடக்கிபாளையம் பகுதியில் வேளாண் அதிகாரிகளுக்கு செய்முறை விளக்கம் அளிக்கப்படவுள்ளது.

**வால்பாறையில் தென்மேற்கு பருவமழை குறைந்தது**

வால்பாறை: வால்பாறையில் தென்மேற்குப்பருவ மழை குறைந்துவருவதால் பி.ஏ.பி.,அணைகளின் நீர்மட்டம் உயர்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. வால்பாறையில் கடந்த ஒரு மாதமாக தென்மேற்குப்பருவ மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக சோலையாறு அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்தது. சோலையாறு அணை, தொகுப்பு அணைகளான மேல்நீராறு, கீழ் நீராறு, அப்பர் ஆழியாறு மற்றும் காடம்பாறை அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களாக வால்பாறையில் தென்மேற்குப்பருவ மழையின் வேகம் குறைந்துள்ளது. இதனால் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் தண்ணீர் வரத்து வெகுவாக குறைந்தது. மழைப்பொழிவு குறைந்ததால் பி.ஏ.பி., அணைகளின் நீர்மட்டம் உயர்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. வால்பாறையில்

மழைப்பொழிவு குறைந்த நிலையிலும் சோலையாறு அணையின் நீர்மட்டம் நேற்று காலை 77.78 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு ஆயிரத்து 182 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. அணையிலிருந்து மானம்பள்ளி பவர் ஹவுஸ் வழியாக பரம்பிக்குளத்திற்கு விநாடிக்கு 830 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. வால்பாறையில் நேற்று காலை 8.00 மணி வரை பதிவான மழையின் அளவு (மில்லி மீட்டரில்)சோலையாறு- 2, வால்பாறை- 3, மேல்நீராறு- 5, கீழ்நீராறு- 5 மழை அளவும் பதிவாகியுள்ளது.

**பசுந்தேயிலைக்கு விலை குறைவு தூளின் "ரேட்' நாளுக்கு நாள் அதிகம்**

ஊட்டி: "பசுந்தேயிலை விலை குறைந்தாலும் தேயிலை தூள் விலையேற்றம் அதிகரித்தது குறித்து அரசு விளக்கம் அளிக்க வேண்டும்,' என வலியுறுத்தப்பட்டுள்ளது. ஊட்டி நகர விழிப்புணர்வு சங்க செயலர் ஜனார்தனன் மாவட்ட கலெக்டருக்கு அனுப்பியுள்ள மனு: அனைத்து அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் மாணவர் நன்னடத்தை விதிமுறைகள் உரிமைக்குட்பட்ட விதிகள் அடங்கிய போர்டு வைத்தல் வேண்டும்; ஊட்டி பந்தலூர் கூடலூர் அரசு பள்ளிகளில் 10ம் வகுப்பு தேர்ச்சி விகிதம் குறைந்துள்ளது குறித்து மாவட்ட கல்வித்துறை விளக்கம் அளிக்க வேண்டும்; நிலச்சரிவில் 48 பேர் உயிரிழப்புக்கு காரணமான, கட்டட மயமாக்கலின் பின் விளைவை அறியாமல், சேம்பர்ஸ் ஆப் காமர்ஸ் வெளியிட்டுள்ள கோரிக்கை மாஸ்டர் பிளான் விதிமுறை மீறலுக்கு வழிவகுப்பதாக உள்ளது; கேபிள் கார் திட்டமும் சுற்றுச்சூழலுக்கு எதிராக உள்ளது.

ஏ.டி.சி., பகுதியில் லாரிகள் நிறுத்தப்படுவதால் சாலையோர தடுப்புகள் இடிந்து சேறும் சகதியும் நிறைந்து காணப்படுவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது; ரேஷன் கடைகளில் தரமற்ற அரிசி பத்து கிலோ வாங்கினால் மட்டுமே சரி பாதி மீதி அரிசி வழங்கப்படும் என நுகர்வோர் நிர்ப்பந்திக்கப்படுவதை தடுக்க வேண்டும்; டேவிஸ் பூங்கா புதுப்பொலிவுடன் என்று சுற்றுலாவினருக்கு அனுமதிக்கப்படும் என்பதை தெளிவுபடுத்த வேண்டும்; பல வார்டுகளில் நகராட்சி நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு தகர கூரை வேய்ந்த ஷெட்களாக மாறியுள்ளதை அகற்ற வேண்டும்;பசுந்தேயிலை விலை குறைந்தாலும் தேயிலை தூள் விலையேற்றம் அதிகரித்தது குறித்து அரசு விளக்கம் அளிக்க வேண்டும்; புதிய பதிவிற்கு கால தாமதத்தை குறைக்க, வேலைவாய்ப்பு அலுவலகத்தை முழுமையாக கம்ப்யூட்டர் மயமாக்க வேண்டும். இவ்வாறு, ஜனார்தனன் கூறியுள்ளார்.

**நேந்திரம் வாழை விவசாயத்தில் பந்தலூர் விவசாயிகள் ஆர்வம்**

பந்தலூர்: நேந்திரன் வாழை விவசாயத்தில் நல்ல லாபம் கிடைத்து வருவதால் பெரும்பாலான விவசாயிகள் நேந்திரம் வாழை விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். பந்தலூர் மற்றும் கூடலூர் பகுதி

விவசாயிகள் துவக்கத்தில் காபி விவசாயத்தை மட்டுமே நம்பியிருந்தனர். பின்னர் படிப்படியாக தேயிலை விவசாயத்தில் அதிக நாட்டம் செலுத்த துவங்கினர். அத்துடன் கூடலூர் பகுதி வயல்வெளிகளில் காய்கறி விவசாயத்திலும் பெரும்பாலான விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். ஆனால், பந்தலூர் பகுதியில் காய்கறி விவசாயம் மேற்கொள்வதில் விவசாயிகள் ஆர்வம் செலுத் தாத நிலையில், தேயிலைக்கு அடுத்தபடியாக நேந்திரம் வாழை விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். ஒரு கிலோ நேந்திரம் வாழை காய் 18 ரூபாய் வரை விலை கிடைத்தது. தற்போது கிலோவிற்கு 14 ரூபாய் விலை கிடைத்து வருகிறது. நேந்திரம் வாழை விவசாயத்தில் காய் மட்டுமின்றி பூ மற்றும் வாழை கன்றுகள் விற்பனை செய்யப்படுகிறது. இதனால், நேந்திரம் வாழை விவசாயம், விவசாயிகளை வாழ வைக்கும் விவசாயம் என்றே கூறப்படுகிறது.

**ஆவின் சார்பில் சோள விதைகள் உற்பத்தி செய்ய சிறப்பு பயிற்சிகள்**

ஊட்டி: ஊட்டி ஆவின் சார்பில், 100 சதவீத மானியத்தில் பசுந்தீவன சோள விதைகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் (2009-10) கீழ், 100 சதவீத மானிய அடிப்படையில் நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் மூலம் 178 பயனாளிகளுக்கு பசுந்தீவன உற்பத்தி பயிற்சி அளிக்கப்பட உள்ளது. முதற்கட்ட பயிற்சியில் ஊட்டி புதிய ஆவின் பண்ணை கூட்ட அரங்கில் நடந்தது. 35 நபர்கள் பங்கேற்றனர். பங்கு பெற்ற அனைவருக்கும் சோள விதைகள் மற்றும் பசுந்தீவனக்கன்றுகளை பொது மேலாளர் ஞானகுரு வழங்கினார். நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் கால்நடை மருத்துவர் ஜெபராணி, மாவட்ட கால்நடை பண்ணையின் கால்நடை மருத்துவர் முல்லை செல்வன் பயிற்சி வகுப்புகளை நடத்தினர். லாபகரமாகவும், ஆரோக்கியமாகவும் கால்நடைகள் வளர்ப்பதற்கு இயற்கை வேளாண்மையில் வளரும் தொழுஉரம் மற்றும் இதர நல்ல கழிவு பொருட்களை உரிய முறையில் சேர்த்து தயாரித்து வழங்கவும் பயிற்சி அளிக்கப்படும். மேலும், பசுந்தீவனம் மற்றும் உலர் தீவன உற்பத்தி பயிர்களை விஞ்ஞான முறைப்படியும் சாகுபடி செய்து கால்நடைகளுக்கு இடர் ஏற்படாத வண்ணம் ஆண்டு முழுவதும் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இந்த பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகவும் உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**சிறு தேயிலை விவசாயிகள் மேம்பாட்டு ஆணையம் அவசியம்**

கூடலூர்: "நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலை விவசாயிகளின் மேம்பாட்டு ஆணையம் அமைக்க வேண்டும்,' என வலியுறுத்தப்பட்டுள்ளது. கொல்கத்தாவில் கடந்த மாதம் 30ம் தேதி தேயிலை

வாரிய கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்திற்கு நீலகிரி மாவட்ட தேயிலை வாரிய உறுப்பினர் கோஷிபேபி பங்கேற்றார். கூட்டம் தொடர்பாக கூடலூரில் கோஷிபேபி கூறியதாவது: இந்தியாவில் சிறு தேயிலை விவசாயிகளின் குறைகளை தீர்க்க, சிறு தேயிலை விவசாயிகள் மேம்பாட்டு ஆணையம் விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டும். 11வது ஆண்டு திட்டத்தின் கீழ் ஆணையம் உருவாக்க 14 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணையம் நடைமுறைக்கு வந்தால், சிறு தேயிலை விவசாயிகளின் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும்; சிறு தேயிலை விவசாகள், பசுந்தேயிலை கொள்முதல் தொழிற்சாலை, அரசு தரப்பு பிரதிநிதிகள் இதில் இடம் பெறுவர்; நீலகிரி மாவட்டத்தில் கூடலூர், ஊட்டி, குன்னூர், கோத்தகிரி பகுதிகளில் சிறு தேயிலை ஆலோசனை மையம் அமைக்க வாய்ப்புள்ளது. இலங்கை, கென்யா போன்ற நாடுகளில் இது போன்று அமைக்கப்பட்டுள்ள ஆணையத்தினால் சிறு விவசாயிகள் அதிகளவில் பயனடைந்து வருகின்றனர். இது போன்று பயனையும் இங்குள்ள சிறு தேயிலை விவசாயிகளும் பெற முடியும். தேயிலை தோட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர் குழந்தைகளின் கல்விக்காக வழங்கப்படும் கல்வி உதவித்தொகை விரைவாக சென்றடைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2006ம் ஆண்டு சிறு விவசாயிகளின் குழந்தைகளுக்கு சுமார் 57 லட்சம் ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. தற்போது அவை நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், சிறு விவசாயிகளின் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர். சிறு தேயிலை விவசாயிகளின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை ஆண்டுக்கு 40 ஆயிரம் ரூபாய் வழங்க வேணடும்; நீலகிரி மாவட்டத்தில் 65 ஆயிரம் சிறு விவசாயிகள் உள்ளனர்.

இங்கு 17 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் உட்பட 167 தேயிலை தொழிற்சாலைகள் உள்ளன. கடன் சுமையினால் 48 தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இதனால், பசுந்தேயிலையை சாலையோரங்களில் கொட்டும் நிலை உருவாகியுள்ளது. இதற்கு தீர்வு காண, நீலகிரி மாவட்டத்தில் 20 மினி தேயிலை தொழிற்சாலைகள் அமைப்பதுடன், மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை புனரமைத்து செயல்பட நிதி ஒதுக்க வேண்டும். சிறு தேயிலை விவசாயிகளுக்கு முழு கவனம் செலுத்தும் வகையில், காபி வாரியம், ரப்பர் வாரியம் உள்ளது போன்று சிறு விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப, தேயிலை வாரியத்திலும் ஆட்கள் நியமிக்க வேண்டும். இவ்வாறு கோஷிபேபி கூறினார்.

**மானிய விலையில் விதைகள்**

மதுரை: மதுரை மேற்கு வேளாண்மை உதவி இயக்குனர் சுருளிபொம்முஅறிவிப்பு:மதுரை குலமங்கலம், பெரியபட்டி, பொதும்பு, தேனூர், சிறுவாலையைச் சேர்ந்தவர்களுக்கு, நெல் விதை

கிலோ ஒன்றுக்கு ரூபாய்.9 வீதம் 12 மெட்ரிக் டன் விதைகளும், செல்லகவுண்டன்பட்டி, மஞ்சம்பட்டி விவசாயிகளுக்கு, உளுந்து அல்லது பாசிப்பயறு கிலோ ஒன்றுக்கு ரூபாய் 12 வீதம் 500 கிலோ விதைகளும், வெளிச்சநத்தம், விட்டங் குளம்விவசாயிகளுக்கு நிலக்கடலை விதை கிலோ ஒன்றுக்கு ரூபாய் 12 வீதம் 500 கிலோ விதைகள்மானிய விலையில் வினியோகம் செய்யப்படவுள்ளது என தெரிவித்துள்ளார்.

**மதுரையில் மல்லிகை விலை மலிவு"சென்ட்' தொழிற்சாலை அமையுமா**

மதுரை: மதுரை மார்க்கெட்டில் மல்லிகை பூ விலை மலிந்து கிடக்கிறது.சில நாட்களாக மதுரை பூமார்க்கெட்டுக்கு மல்லிகை வரத்து அதிகமாக இருக்கிறது. இதற்கு காரணம், சமீபத்தில் பெய்த மழை. மதுரையைச் சுற்றியுள்ள சத்திரப் பட்டி, மூடுவார்பட்டி, எலியார்பத்தி, வலையங் குளம், சம்பக்குளம் ஆகியபகுதிகளில் மல்லிகை பூ விவசாயம் செய்யப்படுகிறது.ஏப்ரல் மாதம் மழை பெய்து, இங்கு பூ வரத்து இருந்திருக்க வேண்டும். ஆனால் அப்போது மழை பெய்யாததால், பூ விளைச்சல் ஆகவில்லை. சமீபத்தில் மழை பெய்ததால், பூ விளைச்சல் அமோகமாக இருக்கிறது. இதனால் பூ விலை சரிந்துள் ளது. ஒரு வாரமாக மல்லிகை பூ விலை ஒரு கிலோ 20 ரூபாய் முதல் 30 ரூபாய் என்ற அளவில் விற்கிறது. பூ வியாபாரிகள் சங்க தலைவர் ராமச்சந்திரன் கூறும்போது, ""பூ விலை சரிவால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப் பட்டு உள்ளனர். பூ விவசாயத்தை காப்பாற்ற வேண் டுமானால், இப்பகுதியில் மல்லிகை சென்ட் உற்பத்தி தொழிற்சாலை துவக்க வேண்டும்'' என்றார்.

**களை எடுக்க புதிய நவீன கருவி அறிமுகம்:நெல்லையில் அதிகாரிகள் குழுவினர் ஆய்வு**

திருநெல்வேலி:நெல்லை மாவட்டத்தில் களை எடுக்க புதிய நவீன கருவி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனை நெல்லையில் அதிகாரிகள் குழுவினர் ஆய்வு செய்தனர்.தருவையில் செம்மை நெல் பயிரிடப்பட்ட வயலில் பெட்ரோலினால் இயங்க கூடிய புதிய களை எடுத்து, அதனை மட்க செய்யும் கருவி செயல்பாட்டை கலெக்டர் ஜெயராமன் ஆய்வு செய்தார்.பின்னர் கலெக்டர் கூறியதாவது:மாவட்டத்தில் நடப்பாண்டில் 36 ஆயிரத்து 800 எக்டேர் நிலப் பரப்பில் செம்மை நெல் சாகுபடி செய்ய நிர்ணயிக்கப்பட்டு தற்போது கார் பருவத்தில் 13 ஆயிரத்து 800 எக்டேர் பரப்பில் நெல் பயிரிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.பாளை தாலுகாவில் 2,300 எக்டேர் நிலப் பரப்பில் செம்மை நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

செம்மை நெல் சாகுபடி முறையால் விவசாயிகள் அதிக மகசூல், லாபத்தை பெ முடியும். இச்சாகுபடி முறையில் இதுவுரை களைகளை மக்கி உரமாக்கிட கோனோவீடர் என்ற களைக்கருவி பயன்படுத்தப்பட்டது. தற்போது நவீன விசை களை கருவி மூலம் முதிர்ந்த வேர்கள் அறுபட்டு புதிய வேர்கள் அதிகமாக உற்பத்தியாவதுடன் நுண்ணுயிர்களின் செயல்பாடுகளும்

அதிகமாக உள்ளது.கடந்த ஆண்டில் தமிழகத்தில் நெல்லை மாவட்டத்தில் செம்மை நெல் சாகுபடி செய்யப்பட்டு 15 ஆயிரத்து 875 கிலோ மகசூல் கிடைத்து சாதனை அடையப்பட்டுள்ளது.

பண்பொழி, புளியரை கிராமங்களில் முழுமையாக எந்திரங்கள் மூலம் செம்மை நெல் சாகுபடி பயிரிடப்பட்டுள்ளது. விவசாயிகள் தற்போது சிக்கனமான முறையில் களைகளை நீக்கி செம்மை நெல் சாகுபடியின் மூலம் அதிக மகசூலை பெற்று பயன் பெறலாம்.இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார்.இதில் வேளாண்மை இணை இயக்குனர் சுப்பிரமணியம், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) துரைப்பாண்டியன், அக்ரோ என்டர்பிரைசஸ் நிர்வாக இயக்குனர் சுரேஷ் வெங்கட்ராமன், வேளாண் அலுவலர்கள் ஞான தீபக், எழில், சிவகுமார், விவசாயி பெருமாள் நாயக்கர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**உளுந்து பயிரில் மஞ்சள் தேமல் நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்தம் வழிமுறை**

தூத்துக்குடி : உளுந்து பயிரைத் தாக்கும் மஞ்சள் தேமல் நோய் தாக்குதலை கட்டுப்டுத்த வேளாண் விஞ்ஞானி யோசனை கூறியுள்ளார்.மஞ்சள் தேமல் நோய் தாக்குதலுக்குட்பட்ட பயிரின் இலைப்பரப்பில் முதலில் சிறிய புள்ளிகள் தோன்றி படிப்படியாக மஞ்சள் நிறப்படலங்ளாக மாறிவிடும்.
உளுந்து சாகுபடியில் மஞ்சள் தேமல் நோய் மிக முக்கியமானதாகும். இந்த நோயானது உளுந்தை மட்டுமின்றி பச்சைபயிறு, துவரை மற்றும் சோயா மொச்சை போன்றவற்றை தாக்கி மகசூல் இழப்பை ஏற்படுத்தும். இந்த நோயின் அறிகுறிகளான மஞ்சள் நிற தேமல் படலங்கள் முதன் முதலில்,இளம் இலைகளில்தான் காணப்படும். இந்த நோயின் பாதிப்புக்குட்பட்ட பயிர் முதிர்ச்சியடைய காலதாமதமாகும்.

மேலும் குறைந்த அளவே பூக்கள் மற்றும் காய்களைக் கொண்டிருக்கும்.காய்கள் சிறிய அளவிலும் உருமாறியும் காணப்படும். மஞ்சள் தேமல் நோயானது செடியின் குறைந்த வயதில் (பூக்கும் முன்பு) தாக்கும் பொழுது பயிரானது காய் பிடிக்காமலேயே இறந்துவிடும் வாய்ப்புள்ளது. எனவே பாதிக்கப்பட்ட செடிகளை உடனே பிடுங்கி அழிப்பதன் மூலம் இந்தநோய் பரவாமல் சிறிதளவு தவிர்க்க முடியும். இந்த கொடிய நச்சுயிரி நோய் வெள்ளை ஈ மூலம் பரவுகிறது.வெள்ளை ஈக்கள் நடமாட்டத்தினை கண்காணிக்க நெடுஞ்சாலை மஞ்சள் நிறம் பூசப்பட்ட டப்பாக்களில் விளக்கெண்ணெய் தடவி ஏக்கருக்கு ஐந்து என்ற அளவில் பயிர்மட்டத்தில் குச்சிகளில் கவிழ்த்து வைக்க வேண்டும். ஏக்கருக்கு 200 மில்லி டைமீத்தோயேட் அல்லது மானேகுரோட்டபாஸ் என்ற பூச்சிக்கொல்லியினை 200 லிட்ட தண்ணீரில் கலந்து தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்த முடியும். மருந்து கரைசல் பயிரின் பாகங்களில் நன்கு பரவிப் படிவதற்காக வேளாண்மைக்கான திரவ சோப்புகளான சாண்டோவிட், இன்ட்ரான் போன்ற வற்றுள் ஏதேனும் ஒன்றினை ஒரு லிட்டர்

மருந்து கரைசலுக்கு கால் மில்லி வீதம் சேர்த்து கலக்கிக் கொள்ள வேண்டும்.கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க பயிரின் வளர்ச்சியினைப் பொறுத்து ஏக்கருக்கு இருநூறு லிட்டர் வரை கரைசல் தேவைப்படும். இவ்வாறு திருவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முருகன் தெரிவித்தார்.

**தரமான விதைகளை மட்டுமே விற்க வேண்டும் : வேளாண் அதிகாரிகள் அறிவுரை**

உடுமலை : விவசாயிகளுக்கு நல்ல தரமான விதைகளை மட்டுமே விற்க வேண்டும் என விற்பனையாளர்களுக்கான பயிற்சி முகாமில் வேளாண் அதிகாரிகள் அறிவுறுத்தினர்.

உடுமலை, மடத்துக்குளம் வட்டாரத்திலுள்ள விதை விற்பனையாளர்களுக்கான பயிற்சி முகாம் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் நடந்தது. உடுமலை விதைச்சான்று அலுவலர் மகாலிங்கம் வரவேற்றார். மடத்துக்குளம் வேளாண்மை உதவி இயக்குனர் பொன்முடி தலைமை வகித்தார்.

உடுமலை வேளாண்மை உதவி இயக்குனர் டாம்பி சைலஸ்பேசியதாவது: விற்பனையாளர்கள் விவசாயிகளுக்கு விதை விற்கும் போது அதற்குரிய ரசீது வழங்குவதோடு, அதில், விதைக்குவியல் எண், பயிர், ரகம் போன்ற விபரங்களை குறிப்பிட்டு , விவசாயிகளிடம் கையெழுத்து பெறுவதோடு, விற்பனையாளர்களும் கையெழுத்திட்டு ரசீது வழங்க வேண்டும்.தரமான விதைகளை மட்டுமே விற்பனை செய்வதோடு, விதைகளை நல்ல முறையில் சேமித்து வைக்க வேண்டும். காலாவதியான விதைகளை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும் என்றார்.

விதை ஆய்வாளர் வெங்கடாசலம், "விற்பனையாளர்கள் தங்களது விற்பனை நிலையத்தில் இருப்பு மற்றும் விலைப்பட்டியல் அவசியம் வைக்க வேண்டும். பெற்றுள்ள உரிமத்தை விவசாயிகள் பார்வைக்கு தெரியும் வைக்க வேண்டும். விதைப்பையில் பொருத்தப்பட்டுள்ள அட்டையில் முழுவிபரமும் இருக்க வேண்டும். விதை சம்பந்தமான அனைத்து பதிவேடுகளும் தவறாமல் பராமரிக்க வேண்டும் ' என அறிவுறுத்தினார்.

---

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

***உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 12.63%–ஆக குறைந்தது***



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம், ஜூன் 26–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 12.63 சதவீதமாக மேலும் குறைந்துள்ளது. இது, இதற்கும் முந்தைய வாரத்தில் 12.92 சதவீதமாக இருந்தது.
கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், பழங்கள், காய்கறிகள் மற்றும் குறிப்பிட்ட சில பருப்பு வகைகளின் விலை குறைந்திருந்தது. அதேசமயம், மக்காச்சோளம் (5%), கம்பு (2%), முட்டை, ஆட்டு இறைச்சி, சோளம், ஊறுகாய் வகைகள், நறுமண பொருள்கள் (தலா 1%) ஆகியவற்றின் விலை உயர்ந்திருந்தது.
மத்திய அரசு ஜூன் 25–ந் தேதி, பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலையை அதிகரித்தது. இதன் காரணமாக, எரிபொருள்களுக்கான பணவீக்கம் 18.02 சதவீதமாக அதிகரித்துள்ளது.
மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும், நாட்டின் பணவீக்க விகிதம் சென்ற மே மாதத்தில் 10.16 சதவீதம் என்ற அளவில் மிகவும் அதிகரித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.